12

# பிறருக்கு உதவுவோம்

وَتَعَاوَنُوْا عَلَى الْبِرِّ وَالتَّقْوٰى وَلَا تَعَاوَنُوْا عَلَى الْاِثْمِ وَالْعُدْوَانِ

''இன்னும் நன்மையிலும் பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்; பாவத்திலும், பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம்'' (5:2)

அல்லாஹுத்தஆலா இவ்வுலகையும் அதிலுள்ள அனைத்தையும் சில நியதிகளின் அடிப்படையில் படைத்து நிருவகிக்கின்றான். எல்லா உயிரினங்களையும் ஒன்றில் ஒன்று தங்கி வாழும் ஒழுங்கில் படைத்துள்ளான். மனிதனை மிக உன்னதமான படைப்பாகப் படைத்துள்ளான். உலகில் சிறந்த சமூகமொன்றைத் தோற்றுவிக்கத் தேவையான வழிகாட்டல்களை வழங்கியுள்ளான். இந்த இறை வழிகாட்டலே இஸ்லாம் மார்க்கமாகும்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் மனித சமூகத்தின் உயர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் உழைக்க வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகின்றது.



இதனை இப்பாடத்தின் ஆரம்பத்தில் உள்ள அல்குர்ஆன் வசனம் (5:2) சுட்டிக் காட்டுகின்றது.

ஒரு முஃமினின் அனைத்து செயற்பாடுகளும் அடுத்தவருக்குப் பயனளிப்பதாக அமைய வேண்டும். அவன் தனக்காக மட்டும் வாழாமல் பிறருக்காகவும் வாழ வேண்டும். அப்போதுதான் அவனது வாழ்வு அர்த்தமுள்ளதாக அமையும்.

''மனிதர்களுக்கு அதிகம் பயனளிப்பவரே மனிதர்களில் சிறந்தவராவார் '' (பைஹகி ) என்ற ஹதீஸ் ஒரு முஸ்லிம் இன மத குல நிற வேறுபாடுகளுக்கு அப்பால் சமூகத்திற்குப் பயனுள்ள ஒருவனாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

மக்களுக்குப் பிரயோசனமானவனே அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானவனாவான். ஒரு முஸ்லிமின் உள்ளத்தில் சந்தோஷத்தை ஏற்படுத்துவது அவனைவிட்டும் ஒரு கஷ்டத்தை நீக்குவது அவனது கடனை அடைப்பது, மானத்தைக் காப்பது, நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பது, பாதையிலுள்ள தீங்கு தரும் பொருட்களை அகற்றுவது, குருடர் செவிடர் ஊமையர் போன்றோருக்கு உதவுவது, தாகத்தோடு இருப்பவருக்கு நீர் புகட்டுவது, பசித்தவருக்கு உணவளிப்பது, பலவீனர்களுக்குத் தோள் கொடுப்பது போன்ற யாவும் அல்லாஹ்வின் அன்பைப் பெற்றுத்தரும் செயல்களாகும்.

''தான் விரும்புவதைத் தன் சகோதரனுக்கும் விரும்பாதவரை உங்களில் எவரும் உண்மை விசுவாசியாக மாட்டார்.'' (புஹாரி, முஸ்லிம்)

ஒரு சமூகத்திலுள்ள அநாதைகள், விதவைகள், அங்கவீனர்கள், ஏழைகள், பெண்கள், சிறியோர், முதியோர் போன்ற பலவீனர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுடன் அன்போடும் கருணையோடும் நடந்துகொள்ள வேண்டும். அவர்களைத் தாழ்வாகவோ சுமையாகவோ எண்ணக்கூடாது. அவர்கள் அல்லாஹ்விடத்தில் கண்ணியத்திற்குரியவர்கள்.

**''மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள் : அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும், தாய் தந்தையருக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள் ; நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடை**

யோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்ப தில்லை.'' (அல் குர்ஆன் 4:36 )

*நீங்கள் உதவி செய்யப்படுவதும் இரணம் அளிக்கப்படுவதும் உங்களில் உள்ள பலவீனர்களின் காரணமாகத்தான் (அபூ தாவுத்)*

*அல் குர்ஆன் பல இடங்களில் இபாதத் செய்யுமாறு கூறிவிட்டு நல்ல காரியங்களைச் செய்யுங்கள் எனவும் கூறுகின்றது.*

''ஈமான் கொண்டவர்களே! நீங்கள் ருகூஉ செய்யுங்கள் ஸுஜூது செய்யுங்கள். உங்கள் இறைவனை வணங்குங்கள். நல்ல காரியங்களில் ஈடுபடுங்கள். நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.'' (அல் குர்ஆன் 22:77)

''தீர்ப்பு நாளைப் பொய்யெனக் கருதியவனைப் பார்த்தீரா? அவன் அநாதையை விரட்டுகிறான். ஏழைக்கு உணவளிக்க அவன் தூண்டுவ தில்லை.'' (அல் குர்ஆன் 107:1-3)

*வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவது போலவே சமூகத்தில் காணப் படும் பலவீனர்களுக்காகப் பாடுபடுவதும் கடமையாகும். ஒன்றைவிட்டு இன்னொன்றை மாத்திரம் செய்தால் ஒருபோதும் மறுமையில் வெற்றி யடைய முடியாது. இஸ்லாமிய சமூகத்திலுள்ள எந்த ஓர் அங்கத்தவரும் கைவிடப்படக்கூடாது.*



அனைவருடைய இன்ப துன்பங்களிலும் பங்குகொள்ள வேண்டும். இதன் மூலமே சமூகத்தின் கட்டுக்கோப்பும் உறுதிப்பாடும் பேணப்படும். எனவேதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்லிம் சமூகத்தை ஓர் உடலுக்கு ஒப்பிட்டுக்கூறினார்கள்.

''பரஸ்பரம் அன்புகொள்வதிலும் கருணை காட்டுவதிலும் முஸ்லிம்கள் ஒரே உடலை ஒத்தவர்கள். அதில் ஓர் உறுப்பு நோய் வாய்ப்பட்டால் ஏனைய உறுப்புகளும் விழித்திருந்து வருத்திக்கொண்டு அக்கஷ்டத்தில் பங்கெடுக்கின்றன.'' (புஹாரி,முஸ்லிம்)

''ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமின் சகோதரர் ஆவார். அவர் மற்றவருக்கு அநீதி இழைக்கமாட்டார். அவரை ஆதரவற்றவராக விட்டு விட மாட்டார்'' (புஹாரி, முஸ்லிம்)

ஒரு முஸ்லிம் அடுத்த சகோதரனுக்கு பயனுள்ளவனாக வாழும்போது அவனது உள்ளம் விரிவடைகின்றது. பேராசை நீங்குகின்றது. அல்லாஹ்வின் அன்பும் அருளும் கிடைக்கின்றது. மறுமையின் கஷ்டங்கள் நீங்குகின்றன.

''யார் ஒரு முஸ்லிமின் கஷ்டத்தைப் போக்கி அவரை மகிழ்விக்கின்றாரோ, அல்லாஹ் கியாமத் நாளின் கஷ்டங்களில் ஒன்றை அவரை விட்டும் போக்கி அவரை மகிழ்விப்பான்'' (புஹாரி, முஸ்லிம்)

## பயிற்சி

1. முஸ்லிம்கள் வேறுபாடற்ற நிலையில் பிறருக்கு உதவ வேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் ஹதீஸைக் குறிப்பிடுக.
2. மக்களுக்குப் பயனுள்ளவராக வாழ்வது தொடர்பாக ஐந்து உதாரணங்களை எடுத்துக்காட்டுக.
3. சமூகத்தால் பராமரிக்கப்பட வேண்டிய நலிவுற்றோரின் பட்டியல் ஒன்றைத் தருக.
4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்லிம் சமூகத்தை உடலின் உறுப்புகளுக்கு உவமித்திருந்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.